1995 ஏப்ரல் 5]

கொண்டு ஜின்னிங் பேக்டரியையும், மரத்தை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு ஃபர்னீச்சர் யூனிட்டையும் ஏற்படுத்தித் தருவீர்களா என்று கேட்க விழைகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டம் என்பது தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய வட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில், யார் எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும், அந்தத் தொழில் நிறுவனத்திற்கு மூலதன மானியமாக 20 விழுக்காடு, அரசு மானியமாகத் தருகிறது. அதுமட்டுமல்ல; 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தும், 9 ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்திப் போடுகிற சலுகையும் அளிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல; மின்சார சலுகையும் முதல் ஆண்டுக்கு 60 சதவிகிதம் கட்டினால் போதும்; இரண்டாம் ஆண்டில் 70 சதவிகிதம் கட்டினால் போதும்; மூன்றாம் ஆண்டில் 80 சதவிகிதம் கட்டினால் போதும் என்கிற இந்த சலுகைகளெல்லாம் அரசு கொடுத்திருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே தொழில் துவங்குவதற்கு யார் முன்வந்தாலும் இப்படிப்பட்டச் சலுகைகள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே இருக்கின்ற, தொகுதிக்காக வழங்கப்பட்டிருக்கின்ற இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி தொழில் முனைவர்களை அழைத்து இப்படிப்பட்ட தொழில்களை துவங்குவதற்கு முயற்சியை அவர் எடுத்துக்கொண்டால் அரசு முன்வந்து எல்லா உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 232, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

232—

கைத்தறித்துறையில் தாழ்த்தப்பட்டோருக்கு பணியிட ஒதுக்கீடு

19096*—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நிறுவனங்களிலும், விற்பனை நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோருக்கான பணியிட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கைத்தறி துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள், கோ-ஆப்டெக்ஸ், கைத்தறி வளர்ச்சிக் கழகம் போன்ற பெரிய நிறுவனங்களிலும் பெரும்பாலான நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்களிலும் பணியாளர்களை நியமிக்கும் பொழுது வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெற்று தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகின்றது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டிலே எத்தனை உள்ளன? எவ்வளவு தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? அதில் ஆதிதிராவிடர்கள் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்கள் தமிழகம் முழுவதும் 200-க்கும் மேற்பட்டவை இருக்கின்றன. இவை தவிர இதர மாநிலங்களிலேயும் இருக்கின்றன. இவை அனைத்திலும் வேலைவாய்ப்பு அலுவலகத்தால் கொடுக்கப்படுகிற தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டு அங்கே அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். எவ்வளவு பேர் ஒட்டுமொத்தமாக இருக்கிறார்கள் என்கிற குறிப்பு இல்லை. ஆனால், இதிலே தாழ்த்தப்பட்டவருக்கான இடஒதுக்கீடு அப்படியே எந்த அளவிற்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து கொடுத்திருக்கிறார்களோ அந்த அளவிற்கு பின்பற்றப்பட்டிருக்கிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் 1992 முதல் 3 ஆண்டுகள், ஏறக்குறைய 3 ஆண்டுகள் புதிய பணியாளர்கள் நியமனம் ஏதுவும் செய்யப்படவில்லை. ஆகவே, புதிய நியமனங்கள் 3 ஆண்டு காலத்தில் இல்லை. தீபாவளி, பொங்கல் போன்ற நேரங்களில் விற்பனையாளர்கள் அவ்வப்போது நியமிக்கப்படுகிறார்கள். அதற்குப் பின்னால் அவர்கள் அந்தப் பதவியிலேயிருந்து எடுக்கப்பட்டு விடுகிறார்கள். நிரந்தரப் பணியாளர்கள் யாரும் புதியதாக நியமிக்கப்படவில்லை.

1995 ஏப்ரல் 5]

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது விசேஷ காலங்களில் தீபாவளி, பொங்கல் போன்ற நேரங்களில் தேவையான ஊழியர்கள் தற்காலிகமாக நியமிப்பது யாரை வேண்டுமானாலும் சேர்க்கலாம், யாரை வேண்டுமானாலும் நீக்கலாம். ஆனால், அதே நேரத்திலே நிரந்தரமாக தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களிலே விற்பனை நிலையங்கள் வைக்கின்ற அந்தப் பகுதிகளிலே இவர்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனை சதவீதங்கள் இன்றைக்கு சரியாக கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தோடு, எந்தெந்தப் பதவி உயர்வுகளில் அந்தப் பணியாளர்கள் அமர்த்தப்படுகின்றார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு எவ்வளவோ அந்த அளவிற்கு இதிலே பின்பற்றப்படுகிறது. விற்பனையாளர்கள் இந்தப் பணிகளிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நிரந்தரப் பணியாளர்களாக இருக்கின்ற விற்பனையாளர்கள் 1989–லேயிருந்து 1992 வரை இதிலே நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் விற்பனையாளர்களாகவும், மேல் பதவி மேனேஜர் பதவிகளிலேயும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் அந்த விகிதாசாரப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். மொத்தப் பணியாளர்கள் எவ்வளவு பேர்? அதில் விகிதாசாரப்படி எத்தனை பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடஒதுக்கீட்டைப் பின்பற்றாமல் எந்தத் துறையிலேயும் நியமனம் செய்ய முடியாது. அதை முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். எவ்வளவு இடஒதுக்கீடு தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு, பிற்பட்டோருக்கு என்று அரசாங்கத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவிற்கு இடஒதுக்கீட்டை நிச்சயமாக இந்தத் துறை செய்து இருக்கிறது என்பதில்

எள்ளளவுகூட ஐயம் இல்லை. ஆகவே, இதில் எந்த இடத்திலாவது ஏதாவது குறையிருந்தால் அதை மட்டும் குறிப்பிட்டுக் கேட்டால் நாங்கள் பதில் சொல்ல முடியுமே தவிர, பொதுவாக எல்லா இடங்களிலேயும் இடஒதுக்கீடு, அது கோ-ஆப்டெக்ஸ்-ஆக் இருந்தாலும், ஹேன்லூமாக இருந்தாலும் அது கடைபிடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, தாழ்த்தப்பட்டோருக்கான பணி இடஒதுக்கீடு பின்பற்றப்படுகிறதா என்பதுதான். பின்பற்றப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி: எத்தனை சதவீதம்? 500 பேர் வேலை பார்க்கிறார்கள் என்றால், அந்த 500 பேரில் எத்தனை சதவீதம்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: எத்தனை சதவீதம் இடஒதுக்கீடு என்பது உங்களுக்குத் தெரியாதா? தாழ்த்தப்பட்ட மக்கள் என்றால் 18 சதவீதம் இடஒதுக்கீடு இருக்கிறது. அந்த இடத்தை அப்படியே பின்பற்றியிருக்கிறது துறை. இல்லையென்று சொன்னால் அவர்கள் கோர்ட்டுக்கு வழக்கு தொடர்வதற்கு போய் இருப்பார்கள். இதுவரை சரியான முறையிலே நாங்கள் கொடுத்திருக்கிற காரணத்தினாலேதான் கோ-ஆப்டெக்ஸில் வேலை பார்க்கக்கூடிய யாரும் கோர்ட்டுக்குச் செல்லவில்லை. இந்த நடைமுறையை இந்த அரசு சரியாக பின்பற்றியிருக்கிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொத்த எண்ணிக்கை வேண்டுமானால் அதற்கு தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 233, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

233—

தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் விசைத்தறிகள் அமைத்தல்

***23536—திரு. என். ஆர். சிவபதி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் விசைத்தறிகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?